57 ஓட்டுநர் பணியிடங்களை உருவாக்கியும் மற்றும் 59 புதிய வாகனங்களுக்கு எரிபொருள் வருடாந்திர செலவினம் ஒப்பளித்தும் ஆணை வெளியிடப்பட்டது – எரிபொருள் பயனீட்டு அளவு நிர்ணயித்து திருத்தம் வெளியிட்டது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி4) துறை

அரசாணை (நிலை) எண்.46 நாள் 19.3.2008

படிக்கப்பட்டவை

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கடித எண்.69309/2007/எப்1, நாள் 9.10.2007.
2. அரசு ஆணை (நிலை) எண்.12, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.1.2008.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் நேர்முக கடிதம் எண்.69309/2007/எப்1, நாள் 13.3.2008.

------

**ஆணை**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் படிக்கப்பட்ட கடிதம் 1–இல், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைக்கு 57 ஓட்டுநர் பணியிடங்களை தோற்றுவிப்பதற்கும் மற்றும் 59 புதிய வாகனங்களுக்கு எரிபொருள் வருடாந்திர செலவினத்திற்கு ஒப்புதல் கோரியும் அரசிற்கு செயற்குறிப்பினை அனுப்பி வைத்தார். அரசு, அவருடைய செயற்குறிப்பை ஏற்று, படிக்கப்பட்ட அரசாணை 2–இல் ஆணை வெளியிட்டது.

2. படிக்கப்பட்ட கடிதம் 3–இல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் படிக்கப்பட்ட அரசாணை –2–இல் எரிபொருள் பயனீட்டு அளவு குறிப்பிடப்படாமல் விடுபட்டுள்ளது என்றும் அவ்வரசாணைக்கு உரிய திருத்தத்தை வெளியிடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். அதன்படி படிக்கப்பட்ட அரசாணை 2–க்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் வெளியிடப்படுகிறது:-

<u>திருத்தம்</u>

<u>பிற்சேர்க்கை-II</u>

அரசாணை (நிலை) எண்.12, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.1.2008–இல், குறிப்பிடப்பட்ட 59 வாகனங்களுக்கு எரிபொருள் அளவு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்படுகிறது:-

| வரிசை எண். | வாகனம் ஒதுக்கப்பட்ட அலுவலர் | வாகனம் ஒன்றிற்கு, மாதாந்திர எரிபொருள் அளவு. |
|---|---|---|
| 1. | 1. உதவி செயற்பொறியாளர் (பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்) மற்றும் உதவி செயற்பொறியாளர் (குடிநீர் விநியோகம்) (52 வாகனங்கள்) | 125 லிட்டர் டீசல் |
| 2. | மண்டல ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனங்கள் (5 வாகனங்கள்) | 110 லிட்டர் டீசல் |
| 3. | ஊரக வளர்ச்சி இயக்ககத்திற்கு ஒதுக்கப்பட்ட மிக முக்கிய பிரமுகர்களுக்கான சீருந்து. (2 வாகனங்கள்) | 160 லிட்டர் டீசல் அல்லது 245 லிட்டர் பெட்ரோல். |

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
சிறப்பு ஆணையர் மற்றும் செயலாளர்.